**கண்டி மா நகர சபை**
**கண்டி மாவட்டம்**

------------------------------------

1. நிதிக் கூற்றுக்கள்

1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2015 மார்ச் 31 திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2014 மார்ச் 31 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 ஆகஸ்ட் 25 திகதி மா நகர சபையின் நகர ஆணையாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

1.2 அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர, நிதிக் கூற்றுக்களில் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு கண்டி மா நகர சபையின் நிதி நிலைமை மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயற்பாடுகளும் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமை ஒன்றினை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்

1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 22,983,102 பெறுமதியான 03 கடன்தீர் நிதியங்களின் மீதி ரூபா 22,889,880 தொகை என குறிப்பிட்ட கணக்குகளில் உட்படுத்தியமையால் ரூபா 93,222 தொகை கணக்குகளில் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) சபைக்குச் சொந்தமான பிரதான நூலகத்தில் மற்றும் 06 கிளை நூலகங்களில் காணப்படும் ரூபா 19,033,111 தொகை பெறுமதியான புத்தகங்களை நிலையான சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்திருக்கவில்லை.

(இ) ரூபா 15,902,381 பெறுமதியான முற்பெறுவனவுகள் தொடர்பான 05 கணக்கு மீதிகள் தொங்கல் கணக்குகளின் கீழ் காட்டப்பட்டிருந்தன.

1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

08 கணக்கு விடயங்கள் தொடர்பாக கட்டுப்பாட்டுக் கணக்குகளின் பிரகாரம், மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 409,844,946 ஆகக் காணப்பட்டதுடன், பட்டோலைகளின் பிரகாரம் கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 335,835,050 ஆகக் காணப்பட்டமையால் ரூபா 74,009,896 இற்கான வித்தியாசம் ஒன்று அவதானிக்கப்பட்டது.

1.3.3 பெற வேண்டிய கணக்குகள்

2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 02 பெற வேண்டிய கணக்கு மீதிகளின் கூட்டுப் பெறுமதி ரூபா 43,979,985 ஆகக் காணப்பட்டதுடன், இம் மீதிகள் 10 வருட காலத்தை விஞ்சிய மீதிகளாகும்.

1.3.4 செலுத்த வேண்டிய கணக்குகள்

2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 03 கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 534,045,489 ஆகக் காணப்பட்டதுடன், அச் செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 492,883,875 தொகை செலவுக் கடன்கொடுத்தோராகும். அவற்றில், 01 வருட காலத்தை மிகைத்துள்ள கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 225,529,305 ஆகும்.

1.3.5 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெறுமதி கூட்டிய வரிக் கணக்கில் காணப்பட்ட ரூபா 12,760,491 இற்கான மீதியின் பெறுமதியினை உறுதிப்படுத்துவதற்குத் தேவையான பட்டோலைகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

1.3.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணக்கமின்மை

பின்வரும் சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) ரூபா 1,773,745 பெறுமதியான 477 வைப்புக்கள் விடயங்கள் தொடர்பாக இலங்கை குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை நி.பி. 571(2) இன் பிரகாரம் செயற்பட்டிருக்க வில்லை.

(ஆ) சபையின் 12 திணைக்களங்களில் 2014 ஆண்டிற்கான பண்டக் கணிப்பீட்டு விடயங்கள் இலங்கை குடியரசின் நிதிப் பிரமாணங்கள் 756 மற்றும் 757 இன் பிரகாரம் 2015 ஜூன் 30 திகதி வரை பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

2. நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், 2014 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 347,248,051 ஆகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 229,972,207 ஆகக் காணப்பட்டமையால் நிதி விளைவுகளில் ரூபா 117,275,844 இற்கான முன்னேற்றம் ஒன்று காணப்பட்டது.

2.2 நிதிக் கட்டுப்பாடு

(i) 02 வங்கிக் கணக்குகளில் வங்கியில் வைப்புச் செய்த போதிலும் தேறப்படாத ரூபா 7,943,744 பெறுமதியான கடன்பத்திர பெறுவனவுகள், காசோலைகள், காசு வைப்புச் செய்தல்கள் 241 சந்தர்ப்பங்கள் தொடர்பான காரணங்களைக் கண்டறிந்து உரிய செயற்பாடுகள் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ii) 02 வங்கிக் கணக்குகளில் 2012 ஆண்டு முதல் 2014 திசெம்பர் 31 திகதி வரை இனங்காணப்படாத செலவு மீதிகளின் பெறுமதி ரூபா 17,535,578 ஆகக் காணப்பட்டதுடன், இனங்காணப்படாத வரவு மீதிகளின் பெறுமதி ரூபா 2,020,587 ஆகக் காணப்பட்டது.

2.3 வருமான நிருவாகம்

2.3.1 வீத வரி

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) மீளாய்வாண்டு ஆரம்பத்தில் ரூபா 114,086,538 இற்கான நிலுவை ஒன்று காணப்பட்டதுடன், ஆண்டிற்கான சிட்டை இடப்பட்டவை ரூபா 270,978,811 ஆகும். ஆண்டின் போது அறவீடுகள் நிலுவையில் நூற்றிற்கு 35 உம் மற்றும் சிட்டையிடப்பட்டவற்றில் நூற்றிற்கு 75 ஆகக் காணப்பட்டமையால், 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 145,611,673 இற்கான மீதியொன்று அறவிடப்பட வேண்டியிருந்த போதிலும் இது தொடர்பாக மா நகர சபைக் கட்டளைச் சட்டத்தின் பிரிவு 242 இன் ஏற்பாடுகளைக் கடைபிடித்து நிலுவை வருமானத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ii) கணக்குகளின் பிரகாரம் மீளாய்வாண்டு இறுதித் திகதியில் உள்ளவாறு வீதவரி மீதி ரூபா 145,611,674 ஆகக் காணப்பட்டதுடன், கணக்காய்வின் போது நகர ஆணையாளரினால் வழங்கப்பட்டிருந்த தகவல்களின் பிரகாரம், மீதி ரூபா 143,344,394 ஆக காணப்பட்டமையால், ரூபா 2,267,287 இற்கான வித்தியாசம் ஒன்று அவதானிக்கப்பட்டது.

2.3.2 நீர்க் கட்டணம்

------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) மீளாய்வாண்டு ஆரம்பத்தில் ரூபா 92,647,416 இற்கான நிலுவை ஒன்று காணப்பட்டதுடன், ஆண்டின் போது சிட்டையிடப்பட்டவை ரூபா 485,757,091 ஆகக் காணப்பட்டது. வருட ஆரம்பத்தில் காணப்பட்ட மீதியில் அறவிடப்பட்ட தொகை மற்றும் சிட்டை இட்டவைகளில் சேகரிக்கப்பட்டவை எவ்வளவு, என சரியான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

(ii) கணக்குகளின் பிரகாரம், மீளாய்வாண்டு ஆரம்பத் தினத்தில் உள்ளவாறு நிலுவை நீர்க் கட்டணம் ரூபா 92,647,416 ஆகக் காணப்பட்டதுடன், நீர் வேலைகள் திணைக்களத்தில் இருந்து சமர்ப்பித்திருந்த தகவல்களின் பிரகாரம், மீதி ரூபா 91,313,547 ஆகக் காணப்பட்டமையால், ரூபா 1,333,869 இற்கான வித்தியாசம் ஒன்று அவதானிக்கப்பட்டது.

2.3.3 ஏனைய வருமானங்கள்

--------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) மீளாய்வாண்டின் ஆரம்பத்தின் போது, 08 வருமான விடயங்களின் கூட்டுத்தொகை ரூபா 43,903,011 இற்கான நிலுவை ஒன்று காணப்பட்டதுடன், ஆண்டின் போது சிட்டை இட்டவை ரூபா 214,744,555 ஆகும். ஆண்டின் போது அறவீடுகள் நூற்றிற்கு 63 ஆக காணப்பட்டமையால், 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 78,771,072 இற்கான தொகையொன்று நிலுவையாகக் காணப்பட்டது.

(ii) கணக்குகளின் பிரகாரம், மீளாய்வாண்டு இறுதித் திகதியன்று உள்ளவாறு நிலுவை ஏனைய வருமானங்கள் ரூபா 183,458,940 ஆகக் காணப்பட்டதுடன், சபையினால் வழங்கப்பட்டிருந்த தகவல்களின் பிரகாரம், மீதி ரூபா 78,771,072 ஆகக் காணப்பட்டமையால், ரூபா 104,687,868 இற்கான வித்தியாசம் ஒன்று அவதானிக்கப்பட்டது.

2.3.4 நீதி மன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

-------------------------------------------------------------------------------------------

(i) மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நீதி மன்றத் தண்டப் பணம் ரூபா 2,856,076 உம் முத்திரைக் கட்டணம் ரூபா 52,769,066 வும் பெற வேண்டியிருந்தது.

(ii) கணக்குகளின் பிரகாரம், மீளாய்வாண்டு இறுதித் திகதியில் உள்ளவாறு நிலுவை நீதி மன்றத் தண்டப் பணம் ரூபா 2,856,076 ஆக காணப்பட்டதுடன், நகர ஆணையாளரினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம், மீதி ரூபா 1,156,326 ஆக காணப்பட்டமையால் ரூபா 1,699,750 இற்கான வித்தியாசம் ஒன்று அவதானிக்கப்பட்டது.

2.3.5 வாடி வீட்டு வாடகை

-------------------------------------

வாடகையின் கீழ் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிலுவை வாடி வீட்டு வாடகை நிலுவை ரூபா 9,178,732 தொகை காட்டப்பட்டிருந்ததுடன், நகர ஆணையாளர் சமர்ப்பித்திருந்த தகவல்களின் பிரகாரம் ஆண்டு இறுதியில் உள்ளவாறு நிலுவையாகக் காணப்பட்ட தொகை ரூபா 7,178,732 ஆகக் காணப்பட்டமையால், ரூபா 2,000,000 இற்கான இணக்கமின்மை அவதானிக்கப்பட்டது.

2.3.6 வாடகை
-------------
கணக்குகளின் பிரகாரம், மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு நிலுவை வாடகை ரூபா 99,080,287 ஆகக் காணப்பட்டமையால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த பட்டோலைகளின் பிரகாரம் நிலுவை வாடகை ரூபா 101,080,287 ஆகும்.

3. செயற்பாட்டு மீளாய்வு
-----------------------------------

3.1 முகாமைத்துவத் திறமையின்மை
-----------------------------------------------------------

(அ) 2014 திசெம்பர் வங்கி இணக்கக் கூற்றின் பிரகாரம், மதிப்பளிக்கப்படாத காசோலைகள் 37 காணப்பட்டதுடன் அவற்றில் ரூபா 171,696 பெறுமதியான 14 காசோலைகளின் மீதி 01 வருடம் முதல் 05 வருடங்கள் வரையான காலம் முதல் முன்கொண்டுவந்து காணப்பட்டது.

(ஆ) 2003 ஆண்டின் போது விபத்துக்குள்ளாகிய இலக்கம் 253-3800 கொண்ட வாகனம் தொடர்பாக ஏற்பட்டுள்ள ரூபா 380,460 இற்கான நட்டத்தினை அறவீடு செய்வதற்காக அல்லது பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்படாமல் கணக்குகளில் முன் கொண்டுவரப்பட்டுள்ளது.

3.2 செயற்பாட்டுத் திறமையின்மை
--------------------------------------------------

2008 - 2013 கால வீச்சில் 25 சந்தர்ப்பங்களில் வழங்கியிருந்த கூட்டுத்தொகை ரூபா 4,581,493 தொகை பெறுமதியான முற்பணத் தொகை மீளாய்வாண்டு இறுதி வரை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. மீளாய்வாண்டின் போது 07 சந்தர்ப்பங்களில் வழங்கியிருந்த கூட்டுத்தொகை ரூபா 637,177 தொகை பெறுமதியான முற்பணத் தொகையினை 2015 ஜூன் 30 திகதி வரை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

3.3 முறை சாராக் கொடுக்கல் வாங்கல்கள்
-----------------------------------------------------------------

(அ) தொலைபேசி விலைப்பட்டி செலுத்துதல்
-------------------------------------------------------------------

அலுவலர் ஒருவரின் உத்தியோக பூர்வ வாசஸ்தல விலைப்பட்டியில் 2014 ஆகஸ்ட் முதல் திசெம்பர் வரை காலப் பகுதிக்கான ரூபா 7,710 இற்கான பியோ டீ.வீ.(PEO TV) விலைப் பட்டிகள் 2010 செப்டம்பர் 01 திகதிய 446 இலக்கம் அரச நிதிச் சுற்று நிருபத்தின் பந்தி (2) இன் ஏற்பாடுகளுக்கு மாற்றமாக சபையினால் செலுத்தப்பட்டிருந்தது. 23 சபை அலுவலர்களுக்கு 2013 மற்றும் 2014 ஆண்டுகளின் போது ஒன்றித்த வரையறையினை மிகைத்து தொலைபேசி செலவு என கூட்டுத்தொகை ரூபா 33,075 தொகை ஒன்று செலுத்தப்பட்டிருந்தது. சர்வதேச நேரடி தொலைபேசி வசதிகளுக்கான கட்டணம் குறிப்பிட்ட அமைச்சு செயலாளரின் அங்கீகாரம் பெற்றிருந்தால் மாத்திரம் செலுத்த முடியும். எனினும் அவ்வாறான அங்கீகாரம் பெற்றிருக்காத இரண்டு அலுவலர்களின் உத்தியோக பூர்வ தொலைபேசி சர்வதேச தொலைபேசி அழைப்புகளுக்காக 2014 ஆண்டின் போது ரூபா 4,649 தொகை ஒன்று செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) சபை கூட்ட அமர்வுப் படி செலுத்துதல்
-----------------------------------------------------------------

மா நகர சபைக் கட்டளைச் சட்டத்தின் பிரிவு 289(2) இன் ஏற்பாடுகளின் பிரகாரம் ஆக்கப்பட்ட கட்டளை ஏதேனும் பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்படும் வரை மற்றும் அவ் அங்கீகாரத்தினை வர்த்தமானியில் பிரசுரிக்கும் வரை செல்லுபடியாகாது என குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் அது தொடர்பாக கவனம் செலுத்தாமல் மத்திய மாகாண முதலமைச்சு செயலாளரின் இலக்கம் சீபீசீ/சீஎம்எஸ்/01/06/01/4-4 கொண்ட கடிதத்தின் பிரகாரம் 2014 பெப்ரவரி 17 முதல் 2014 திசெம்பர் 31 திகதி வரையான காலப் பகுதி தொடர்பாக சபைக் கூட்டங்கள் மற்றும் குழு அமர்வுப் படி ஆக ரூபா 1,259,000 சபை அங்கத்தவர்களுக்கு செலுத்தப்பட்டிருந்தது.

(இ) வான்பிரயாண விமான டிக்கட் கட்டணம்

---

கலந்துரையாடல்கள், கருத்தரங்குகள், பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் உட்பட அனைத்து கடமை பிரயாணங்களுக்காக வெளிநாடு செல்லும் அனைத்து அலுவலர்களும் எந்த நிதியங்களில் இருந்து செலவுகள் மேற்கொண்ட போதிலும், அவரது வான்பிரயாண விமான டிக்கட், 2008 ஏப்ரல் 24 ஆந் திகதி இலக்கம் 431 கொண்ட அரச நிதிச் சுற்று நிருபத்தின் பிரகாரம் ஸ்ரீலங்கன் ஏயாலைன் கம்பனி அல்லது மிஹின் லங்கா (தனியார்) கம்பனியில் இருந்து மாத்திரம் கொள்வனவு செய்யப்பட வேண்டும் என குறிப்பிட்டிருந்த போதிலும், அதற்கு இணக்கமற்ற முறையில் 03 வெளிநாட்டு பிரயாணங்களுக்காக ரூபா 487,610 தொகையொன்று செலவிடப்பட்டு வர்ல்ட் ஏயா பிரைவட் லிமிடட் நிறுவனத்தில் இருந்து விமான டிக்கடர் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது.

3.4 பதவியணிக் கடன்

---

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) 2004 முதல் 2013 வரையான காலப்பகுதியில் இறந்துள்ள மற்றும் ஓய்வு பெற்றுள்ள 24 ஊழியர்களிடம் அறவிடப்பட வேண்டிய ரூபா 1,585,992 இற்கான கடன் மீதி ஒன்று மீளாய்வாண்டு இறுதித் திகதி வரை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ii) இடமாற்றம் பெற்றுச் சென்ற அலுவலர்கள் மற்றும் ஊழியர்கள் 156 பேரிடம் 1999 முதல் 2014 ஜுலை வரை அறவிடப்பட வேண்டிய ரூபா 794,983 இற்கான கடன் மீதிகள் அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(iii) இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ள 22 அலுவலர்களினால் மிகையாகச் செலுத்தியிருந்த ரூபா 77,557 இற்கான கடன் தொகையை மீளாய்வாண்டின் போது தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(iv) 2009 முதல் 2014 வரையான காலப் பகுதியில் பதவியை விட்டுச் சென்றுள்ள 07 அலுவலர்களிடம் அறவிடப்பட வேண்டியிருந்த கடன் மீதி ரூபா 346,836 இனை தீர்ப்பதற்கு முறையான நடைமுறை ஒன்றினை கடைபிடித்திருக்கவில்லை.

(v) சேவை இடைநிறுத்தப்பட்ட 14 அலுவலர்களிடம் அறவிடப்பட வேண்டிய ரூபா 650,337 இற்கான கடன் மீதியொன்று 2014 திசெம்பர் 31 வரை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(vi) சுனாமிப் பேரழிவின் போது காணாமல் போன பெண் அலுவலர் ஒருவரிடம் அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 74,464 இற்கான கடன் மீதி தொடர்பாக முறையான நடைமுறை ஒன்று கடைபிடித்திருக்கவில்லை.

3.5 பயன்படுத்தப்படாத மற்றும் குறை பயன்பாட்டுச் சொத்துக்கள்

---

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) அரச உடைமை ஆக்கப்பட்ட கண்டி உச்ச நீதி மன்றத்தில் இருந்து மா நகர சபை தொழில் நுட்ப வேலைத்தளத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ள பெறுமதியினை இனங்காணப்படாத 04 வாகனங்களினை பதிவு செய்யும் விடயங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அத்துடன், அதற்கான திருத்த வேலைகள் மேற்கொள்ளப்பட்டு பயன்தரு விடயம் ஒன்றிற்காக ஈடுபடுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுத்திருக்கவில்லை.

(ஆ) மத்திய மாகாண சபையில் இருந்து கிடைத்திருந்த பிம் டிரக்டர் வண்டி மற்றும் தீ அணைப்புப் பகுதியில் நிஸான் ஸலீம் ஆகிய 02 வாகனங்களும் 2014 ஜனவரி 01 திகதி தொழில் நுட்ப வேலைத் தளத்திற்கு ஒப்படைக்கப்பட்டிருந்த போதிலும் 2014 பெப்ரவரி 10 திகதி வரை திருத்த வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. அத்துடன், இந்த 02 வாகனங்களும் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) 2013 ஆண்டு முதல் 2014 ஜனவரி மாதம் வரை திருத்த வேலைகளுக்காக தொழில்நுட்ப வேலைத் தளத்திற்கு ஒப்படைக்கப்பட்டிருந்த 10 வாகனங்களுக்காக திருத்த வேலைகள் மேற்கொள்ளப்படாமல் 01 நாள் முதல் 79 நாட்கள் வரை கால வீழ்ச்சி தொழில்நுட்ப வேலைத் தளத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்தது.

3.6 ஒப்பந்த நிருவாகம்
-------------------------------

வீத வரி, பலவின வருமானம் மற்றும் களஞ்சிய விடயங்களை கணனி மயப்படுத்தும் கேள்வி அறிவித்தலின் பிரகாரம், உள்ளூராட்சி நிறுவனங்களுக்காக கணனி மென்பொருட்கள் வழங்கள் தொடர்பாக 10 வருடங்களை விட மிகைத்த அனுபவம் உடைய நிறுவனங்களில் இருந்து கேள்விகள் கோரப்பட்டிருந்த போதிலும், நிறுவப்பட்டு 05 வருடங்களை விட குறைந்த காலத்தை உடைய தனியார் கம்பனி ஒன்றிற்கு ரூபா 1,075,000 தொகைக்கு கேள்வி வழங்கப்பட்டிருந்தது.

4. கணக்களிப் பொறுப்பும் நள்ளாளுமையும்
-----------------------------------------------------------------

பாதீட்டுக் கட்டுப்பாடு
-------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த பாதீட்டின் பிராகரம், மதிப்பீட்டு வருமானங்கள் மற்றும் செலவுகள், உள்ளவாறான வருமானங்கள் மற்றும் செலவுகளுடன் இணக்கஞ் செய்யும் போது 02 வருமான விடயங்களில் நூற்றிற்கு 18 முதல் நூற்றிற்கு 81 வரையும், 07 செலவு விடயங்களில் நூற்றிற்கு 16 முதல் நூற்றிற்கு 52 இனை மிகைத்தும் முரண்கள் அவதானிக்கப்பட்டமையால், பாதீடு பயன்தரு கட்டுப்பாட்டு கருவி ஒன்றாக பயன்படுத்தியிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

(ஆ) முறையான திட்டமிடல் ஒன்று மற்றும் முறையாக கவனம் செலுத்தப்பட்டமையால் தேவைகளை இனங்காணாமல் ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருந்தமையால் 16 பிரதான மூலதனச் செலவு விடயங்களில் ரூபா 29,900,000 இற்கான ஏற்பாடுகள் முழுவதும் சேமிக்கப்பட்டுள்ளது.

(இ) 14 மூலதன செலவு விடயங்களில் மதிப்பீட்டு ஏற்பாடுகளை மிகைத்து நூற்றிற்கு 16 முதல் நூற்றிற்கு நூறினை மிகைத்துள்ள கூட்டுத்தொகை ரூபா 64,632,863 இற்கான தொகையொன்று பயன்படுத்திருக்கவில்லை.

(ஈ) 17 மூலதனச் செலவு விடயங்களில் மதிப்பீட்டு ஏற்பாடுகளில் நூற்றிற்கு 51 முதல் நூற்றிற்கு 99 வரையான வீச்சில் ஏற்பாடுகள் சேமிக்கப்பட்டிருந்தது.

5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்
-----------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக சபையின் கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு

(இ) வருமான நிருவாகம்

(ஈ) சொத்துக்கள் முகாமைத்துவம்

(உ) ஒப்பந்த நிருவாகம்